**தலைப்பு 313 – மத்திய மாகாண சபை - 2023**

**--------------------------------------------------------------------**

## 1. தூரநோக்கு, செயற்பணி மற்றும் செயற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

மத்திய மாகாணத்தின் பெருந்தகை மக்களுக்கு சுபீட்சமுடைய வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கும் இலக்கை கொண்ட இலங்கையின் மிகச் சிறந்த மாகாண சபையாக பரிணமிக்க செய்தல்.

### 1.2 செயற்பணி

மத்திய மாகாணத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் உரிய கலாச்சார, சமூக, பொருளாதார நிலைகள் மற்றும் இயற்கையான சுற்றாடல் ஆகியன காக்கப்படும் வகையில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மனித, பௌதீக வளங்களை செயற்திறனுடனும், பயனுறுதியுடனும் ஈடுபடுத்தி மத்திய மாகாண மக்களுக்கு நிலைபேறான கௌரவமான உயரிய வாழ்க்கை நிலையை ஏற்படுத்திக் கொடுத்தல்.

### 1.3 பிரதான செயற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்.

## 2 மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

மத்திய மாகாண சபைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 48,933 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரை அதில் ரூபா 45,070 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 3,863 மில்லியன் அதாவது 7.89 சதவீதமான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்பு மொத்த நிதிஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 44,817 | 42,098 | 2,719 | 6.07 |
| மூலதனம் | 4,116 | 2,972 | 1,144 | 27.79 |
| **மொத்தம்** | 48,933 | 45,070 | 3,863 | 7.89 |

## 3. கணக்காய்வு அவதானிப்பு

மேற்படி தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.